1975 மார்ச் 8]

வெள்ளகோயில் அரசு உயர்நிலைப் பள்ளி

* 237 **வினு—திரு. மு. பழனிசாமி :** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு சய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடை யளிப்பாரா :

(அ) கோவை மாவட்டம், வெள்ளகோவில் அரசு உயர்நிலைப் பள்ளியில் 1973-74-ம் கல்வி ஆண்டில், மாணவர்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட ஸ்பெஷல் பீஸ் பணத்துக்கு ரசீது கொடுக்கப்பட வில்லை என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதற்கு என்ன காரணம்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

(அ) ஆம்.

(இ) கோவை மாவட்டத்தில் 1971-ம் ஆண்டிற்குப் பிறகு அரசினர் (கழக) உயர்நிலைப்பள்ளிகளுக்கு எழுது பொருள் அச்சுத்துறை இயக்குநரால் ரசீது புத்தகங்கள் விநியோகிக்க இயலவில்லை, ஆகையால் கோவை மாவட்டம் வெள்ளக்கோவில் அரசினர் (கழக) உயர்நிலைப்பள்ளியில் 1973-74-ம் ஆண்டில் மாணவர்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட தனிக் கட்டணத்திற்கு ரசீது கொடுக்கப்படவில்லை. ஆனுல் வசூலிக்கப்பட்ட தொகை முழுவதும் அவ்வப்போது உரிய நிதியில் சேர்க்கப்பட்டுள்ளது. அதுபற்றி மாவட்ட கல்வி அதிகாரியும், மாவட்ட முதன்மை கல்வி அதிகாரியும் ஆராய்ந்து அறிக்கை தந்திருக்கிறுர்கள்.

சங்ககிரி மலையிலுள்ள கோட்டை

* 238 **வினு—திரு. வ. முத்து :** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடை யளிப்பாரா :

சேலம் மாவட்டம், சங்ககிரி மலை மீதுள்ள திப்பு சுல்தான் கோட்டையை புதுப்பித்து மக்கள் பார்த்துச் செல்லும் இட மாக்கும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.